4. மாண்புமிகு தொழில் அமைச்சர்.
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
6. திரு. து. ப. அழகமுத்து.
7. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
8. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.
9. திரு. கே. டி. கே. தங்கமணி.
10. திரு. ஏ. ஆர். பெருமாள்.
11. திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்.
12. டாக்டர் எச். வி. ஹாண்டே.
13. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
14. திரு. இ. எஸ். தியாகராசன்.

பேரவையின் 193 (1) வது விதியின்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் இக் குழுவின் தலைவர் ஆவார்.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவையின் 214 (1) வது விதியின்கீழ் 1973-74-ம் ஆண்டுக்கு பின்வரும் சட்டப்பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. திரு. இ. எஸ். தியாகராசன்.
2. திரு. கே. எஸ். கோதண்டராமையா.
3. திரு. என். கே. பழனிசாமி.
4. திரு. எஸ். அழகுத் தேவர்.
5. திரு. ஏ. சுவாமிதாஸ்.
6. திரு. துரை கோவிந்தராசன்.
7. திரு. நா. வெ. குருசாமி.
8. திருமதி வி. ப. பழனியம்மாள்.
9. திரு. எஸ். முருகையன்.

10. திரு. ந. முத்துவேல்.

11. திரு. எம். கோபால்.

12. திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்.

சட்டப் பேரவையில் 215 (1) வது விதியின்கீழ் திரு. இ. எஸ். தியாகராசன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) குழுக்களின் தலைவர்கள் நியமனத்தில் கடைப் பிடிக்கப்படும் மரபு குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி: இக்குழுக்களுக்கு தலைவர்களை நியமிக்கிற விஷயத்தில் ஏதாவது கன்வென்ஷன்ஸ் உண்டா? உங்களுக்கு முழு அதிகாரமும் இருக்கிறது. குறிப்பிட்ட கமிட்டிக்கு இந்த ஆர்டர்படி என்று ஏதாவது உண்டா?

DR. H. V. HANDE: Sir, we would like to know the *Modus Operandi* adopted by the Hon. Deputy Speaker in the matter of appointment of Chairmen of these Committees. The Committee on Government Assurances point out the assurances given on behalf of the Government and prepare notes on that and so many things. We would like to be enlightened on the method adopted by the Hon. Deputy Speaker in selecting Chairman of this Committee. Of course he has the discretion. Last time it was from the Muslim League. The previous time it was I think from C.P.I., Mr. Manali was the Chairman. What is the method adopted?

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்கிணங்க இந்தக் கமிட்டிகளின் தலைவர்களை நியமிக்கிற பொறுப்பு தங்களுக்கு இருந்தாலும் கூட இதற்கு ஏதாவது முறைகள் இருக்கின்றனவா? அதிலும் குறிப்பாக இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியாக விளங்குகிற ஸ்தாபன காங்கிரஸ் கட்சிக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் எல்லாம் ஏதாவது, ஒரு சலுகை இல்லை என்று சொன்னாலும் கூட முறையான உரிமைகளாவது இங்கு வழங்கப்படுகிறதா என்பதைத் தாங்கள் அறிவிக்கவேண்டும்.